www.tamilarangam.net

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

# EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப்படையினரால் (PLA) கடந்த 10-2-85 ஞாயிறு இரவு காரைநகர் கடற்படை முகாம் தாக்கப்பட்டது தெரிந்ததே. நாற்பதிற்கும் அதிகமான மக்கள் விடுதலைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் முதற்-கட்டமாக கடற்படை முகாமை நோக்கி ரொக்கற் (RPG-7) தாக்குதல் நடாத்தப்பட்ட பின் உள்ளே சென்று இயந்திரத்-துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இப்பலமுனைத் தாக்குதல், முகாமிலிருந்த 600 க்கும் அதிகமான அரசபடையினரை பின்னடைய வைத்ததுடன் பலர் கொல்லப்பட்டனர். மற்றும் மூழ்கடிக்கப்பட்ட கடற்படை ரோந்துப் படகுகளில் 'சங்காய் II' இனப் படகும் அடங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. பின்னர் முகாமிலிருந்த வாகன-ங்கள் எரிக்கப்பட்டன.

மட்டக்களப்பு சிறையுடைப்பு, அமெரிக்க தம்பதிகள் கடத்தல் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளைப் போலவே, மக்கள் விடுதலைப் படையின் இத் தாக்குதலும் அமைந்துள்ளது.

"இறுதி வெற்றி வரை போராடுவோம்"

* வாழ்க மக்கள் விடுதலைப்படை.

* வெல்க ஈழமக்கள் விடுதலைப் போராட்டம்.

22.02.85

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பீரங்கி கப்பல்கள் நாசம்:

தினசரி 13.2.'25

# இலங்கை கடற்படை தளம் வீழ்ந்தது

# தமிழ் போராளிகளின் 'ராக்கெட்' தாக்குதல்

கொழும்பு, பிப். 13- ஈழவிடுதலைப் போராளிகள் ஒரே நேரத்தில் பல முனைகளில் இலங்கை ராணுவத்தை எதிர்த்து பயங்கரமாக கிடுக்கித் தாக்குதல் தொடுத்துள்ளனர். இதற்கு ஈடுகொடுக்க இயலாது இலங்கை ராணுவம் திணறுகிறது.

காரைநகர் கடற்படைத் தளத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற அமைப்பு கைப்பற்றி ஐந்து நட்சத்திரம் கொண்ட சிவப்புக் கொடியை ஏற்றியுள்ளனர்.

தமிழ் போராளிகளின் தீவிரதாக்குதலில் இலங்கை பீரங்கிப் படகுகள் பல தூள் தூளாயின. 4 இலங்கை கப்பல்களைக் கைப்பற்றி, அவற்றிலும் தங்கள் கொடிகளை ஏற்றினார்கள்.

பலாலி ராணுவ முகாம் மீதும் குருநகர் ராணுவ முகாம் மீதும் ராக்கெட் மற்றும் நவீன ரகதுப்பாக்கிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இலங்கை ராணுவத்தினர் கொடுமை நாளுக்கு நாள் வளர்ந்து இனியும் பொறுக்க முடியாது என்ற உச்சநிலையை எட்டிவிட்டது.

இதனால் யாழ்ப்பாணம் மன்னார் பகுதியில் உள்ள தமிழர்கள் தங்கள் பெண்கள் பிள்ளைகளுடன் எப்படியாவது தப்பித்தால் போதும் என்று அணி அணியாக தமிழகம் வந்து சேருகிறார்கள்.

ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களின் உணர்ச்சி மிக்க போராட்டத்துக்கு ஈடு கொடுக்க இயலாத நிலை இலங்கை ராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது. நவீன ஆயுதங்களை இன்னும் வாங்கிக் குவிப்பதற்காக அதுலத் முதலி அமெரிக்காவிற்கும், வெளியுறவு அமைச்சர் ஹமீது இங்கிலாந்துக்கும் சென்று திரும்பி உள்ளனர்

சமீபத்தில் போர்ச்சுகலில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு வந்த விமானம் திருவனந்தபுரத்தில் பெட்ரோல் இல்லாததால் இறங்கியது அந்த விமானத்தை பின்னர் பத்திரமாக இந்தியா சமீபத்தில் வழியனுப்பியது இப்படி ராணுவ தளவாடங்களை இலங்கை அரசு வாங்கிக் குவித்த போதிலும் ஈழவிடுதலைப் போராட்டத்தை ஒடுக்க இயலவில்லை.

## கடற்படை தளம் வீழ்ச்சி

யாழ்ப்பாணத்திலிருந்து 30 கி.மீ தூரத்தில் காரைநகர் கடற்படை முகாம் உள்ளது. இந்த கடற்படை முகாமிலிருந்து தான் ரோந்து படகுகளும், ராணுவ கப்பல்களும் செயல்படுகின்றன. தமிழ் மீனவர்களை கடலில் மறித்து தாக்கி கொள்ளையடிக்கும் சிங்கள ராணுவ வீரர்கள் இங்கிருந்து தான் புறப்பட்டு கிளம்புவது வழக்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை சேர்ந்த கொரில்லா வீரர்கள் காரை நகர் கடற்படை தளத்தின் மீது தாக்குதல் தொடுத்தார்கள்.

கொரில்லா வீரர்களின் தாக்குதலை எதிர்பாராத இலங்கைக் கடற்படை துவக்கத்தில் பின்வாங்கிய போதிலும் பின்னர் உக்கிரமாக வெறித்தனத்தோடு எதிர்த்தது

### 4 மணி நேர சண்டை

நான்கு மணி நேரம் கடுமையான சண்டை நடந்தது. இறுதியில் கடற்படைதளத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வீரர்கள் கைப்பற்றினார்கள்.

இந்த சண்டையில் 150 சிங்கள ராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

காரைநகர் கடற்படைமுகாமில் உள்ள அனைத்துகட்டிடங்களும் நொறுக்கப்பட்டன.

காரைநகர் கடற்படை தளத்தில் நிறுத்தப் பட்டிருந்த பலநவீன பீரங்கிப் படகுகளை தகர்த்து விட்டார்கள் அத்தோடு நான்கு போர்க் கப்பல்களையும் கைப்பற்றினார்கள்.

கடற்படை தளத்தின் மீதும் நான்கு கப்பல்கள் மீதும் ஐந்து நட்சத்திரம் பொறிக்கப்பட்ட ஈழ விடுதலைச் சிவப்புக் கொடியை ஏற்றினார்கள். கடற்படை தளத்தில் வைக்கப் பட்டிருந்த ஏராளமான நவீன ரக ஆயுதங்களையும் கைப்பற்றினார்கள்.

## ராக்கெட் தாக்குதல்

தமிழக மீனவர்களை சுட்... கொன்று அவர்களை துப்பா... கட்டைகளால் தாக்கி, அ... கள்பிடித்த மீன்களை கொள்... அடித்து செல்வதற்கு ... வாங்கவே இந்தத் தாக்கு... நடந்ததாகக் கூறப்படுகிற...

ஈழ விடுதலைப் போராளி... வசம் உள்ள காரை ... கடற்படை தளத்தி... இலங்கை ராணுவம் சு... வளைத்து தாக்கி தங்கள்... மிருந்து கைப்பற்றமல் தடு... நடவடிக்கை எடுத்துள்ளன...

காரைநகர் கடற்ப... தளத்தை சுற்றி உள்ள பகு... யில் குருநகர், பலாலி என்...

இடங்களில் இலங்கைராணு... முகாம்கள் உள்ளன.

இந்த முகாம்கள் மீ... தொடர்ந்து ராக்கெட் வீ... தாக்குதல் நடத்தி வருகி... கள்.

ஈழ கொரில்லா வீரர்... நவீன ரக பீரங்கிகளைப் பய... படுத்தி குண்டு ம... பொழிந்து வருகிறார்கள்,

இரண்டு முகாம்களிலிரு... ராணுவத்தினர் லாரி ... போன்ற வாகனங்கள்... வெளியே வராமல் தடு... சாலைகளில் குண்டு வீ... தகர்த்துள்ளன... இதனால் வாகனங்க... வெளியே வரமுடியாத நி... ஏற்பட்டுள்ளது.

ஈழ விடுதலைப் போராளிக... மேற்கொண்டுள்ள இ... அதிரடித் தாக்குதலை கொழு... புவிலிருந்து வெளியா... செய்திகளும் உறுதிப்படுத்... உள்ளன.

ஈழ விடுதலைப் போராளிக... கூட்டாக மேற்கொண்டுள்... இந்தத்தாக்குதலிலிருந்துத... வது எப்படி என்று தெரி... மல் இலங்கை ராணுவ... திணறுகிறது.

அதனால் இலங்கை ராணுவத்தை முடுக்கிவி... புதிய அமைப்பு ஒன்றி... ஜெயவர்த்தன அவசர... அவசரமாக அமைத்துள்ளா...

### புது ராணுவ அமைப்பு

தனி ஈழம் கோரி ஆயுத... போராட்டம் நடத்தி வரு... தமிழ்ப் போராளிக... ஒடுக்குவதற்காக ராணு... கவுன்சில் ஒன்றை தன... தலைமையில் ஜெயவர்த்த... அமைத்துள்ளார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லங்கை கடற்படையினர் 150 பேர் சா

முரசொலி 14-2-85

- வு.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நடவடிக்கை!

...னை, பிப். 12—
...யிறன்று யாழ் நகரி
...து 30 கி.மீ. தொலை
...ள்ளகாரை நகர் கடற்
... தளத்தை தங்களது
...ராளிகள் தகர்த்ததாக
150 சிங்கள கடற்
...யினரைக் கொன்ற
...வும் ஈழமக்கள் புரட்சி
...விடுதலை முன்னணி
... தெரிவித்தது.
...ன்கு மணி நேர கடும்
...க்குப் பிறகுபோராளி
... இந்தக் கடற்படை
...தை கைப்பற்றி ஏரா
... பீரங்கிப் படை
... சேதப்படுத்தியது
... அது கூறியது.

இந்தத் தளத்திலிருந்து செயல்படும் சிங்களக்கடற் படையினர்தான் இந்திய மீனவர்களுக்கு தொல்லை கொடுத்து வருவதுடன் அவர்கள் பிடிக்கும் மீன்களையும் கொள்ளையடித்து வருகின்றனர். இதற்காக அவர்களுக்குப் பாடம் புகட்டவே இந்தத்தளம் தாக்கப்பட்டது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள செய்திக் குறிப்பு கூறுகிறது.

அதுமேலும் கூறுவதாவது:

காரைநகர் தளத்தைத் தாக்கிய அதே நேரத்தில் குருநகர், பலாலி ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களுக்குப் போகும் சாலைகளிலும் ஈழப் போராளிகள் கண்ணிவெடிகளை வைத்தனர்.

குருநகர் இராணுவ முகாம் மீது ராக்கெட் தாக்குதல் நடத்தி உள்ளே இருந்த கட்டிடங்களைக் கைப்பற்றி ஏராளமான நவீன ஆயுதங்களை கைப்பற்றின.

ஜெயவர்த்தனே தலைமையில் கூட்டு இராணுவ நடவடிக்கைக் குழு ஒன்று புதிதாக அமைக்கப்பட்டிருப்பதே இராணுவத்தால் ஈழப் போராளிகளை சமாளிக்க முடியவில்லை என்பதை அம்பலப்படுத்துகிறது.

குருநகர் இராணுவ முகாமை ஈழப் போராளிகள் வெடி வைத்துத்தகர்த்ததாக ஒரு அயல்நாட்டு செய்தி நிறுவனம் கூறியதாக கொழும்பு தகவல் ஒன்று குறிப்பிடுகிறது. என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

# ஈழப் போராளிகள் திடீர் தாக்குதல்

எதிரொலி 12/2/85

எதிரொலி 12. 2. 85

# கடற்படை தளம் தூள்

## 150 சிங்களவர் மரணம்

சென்னை, பிப். 12- ராமேஸ்வரம் மீனவர்களை சுட்டு-அட்டகாசம் செய்து வரும் சிங்களக் கடற்படையினரின் தளத்தை ஈழ விடுதலைப் போராளிகள் திடீர் தாக்குதல் நடத்தி தூள் தூளாக்கினார்கள்.இதில் 150 சிங்கள ராணுவத்தினர் செத்து ஒழிந்தார்கள்.

ஈழமக்களின் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சார்ந்த கொரில்லாவீரர்கள் சிங்கள கடற்படை தளம் ஒன்றை மின்னல் வேகத்தில் தாக்கி— தூள் தூளாக்கினார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் கரை நகர் இருக்கிறது. இங்கே சிங்கள ராணுவத்தின் கடற்படை தளம்ஒன்று இருக்கிறது.

இந்த தளத்தில் இருக்கும் சிங்கள ராணுவத்தினர்தான் ராமேஸ்வரம் மீனவர்கள் மீது துப்பாக்கிசூடு நடத்தி— மீன்களையும் — வலைகளையும் மீன்பிடி படகுகளையும் கொள்ளையடித்து அட்டகாசம் செய்து கொண்டிருந்தார்கள்.

ராமேஸ்வரம் மீனவர்களுக்குத் தொல்லை தரும் சிங்களக் காடையர்களுக்கு புத்தி புகட்ட ஈழ மக்களின் புரட்சிகர விடுதலை முன்னணி தீர்மானித்தது. இதன்படி கடந்த 10-ந்தேதி ஞாயிறு அன்று இந்த அமைப்பைச் சேர்ந்த கொரில்லா வீரர்கள் திடீரென்று மின்னல் வேகத்தில் இந்த தளத்தை முற்றுகையிட்டுத்தாக்கினார்கள்.

நான்கு மணி நேரம் தொடர்ந்து இடைவிடாது விரஞ்செறிந்த யுத்தம் நடத்தியஅவர்கள் இந்ததளத்தை தகர்த்து தூள் தூளாக்கி கைப்பற்றினார்கள். பீரங்கி பொருத்திய சிங்களப் போர்ப் படகுகளை எல்லாம் அடித்து நொறுக்கி சேதப் படுத்தினார்கள்.

கடற்படை தளத்தை தாக்கிய அதே சமயம் அந்த தளத்தை நோக்கி வரும் பாதைகளை எல்லாம் வெடி வைத்து தகர்த்து போக்குவரத்தை துண்டித்தார்கள்.

### சிங்கள முகாம் தகர்ந்தது

குருநகர் பகுதியில் உள்ள சிங்கள ராணுவமுகாம் மீது தமிழீழ விடுதலைப் போராளிகள் ராக்கெட் தாக்குதல் நடத்திகட்டிடங்களை அடித்து நொறுக்கினார்கள். உள்ளே குவித்து வைக்கப்பட்டிருந்த ஏராளமான நவீன போர் ஆயுதங்களை கைப்பற்றினார்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

12/2/85

# 150 சிங்கள கடற்படை வீரர்கள் படுகொலை: ஈழ கொரில்லா சாகசம்

## சிங்கள முகாமில் ஈழ விடுதலைக் கொடி

EPIC
BM - Box 1738
London WC1 N8XX

EPIC
Post Bag 5551
Madras 600094, S. India

SWISS BRANCH: EPIC

கொழும்பு, பிப். 12: சிங்களவர்களின் ராணுவ முகாம்களில் ஈழ கொரில்லாக்கள் நடத்திய 'திடீர்' தாக்குதல்களில் 150 கடற்படை வீரர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தரைமட்டமான சிங்களவர் முகாம்களில் கொரில்லாக்கள், ஈழ விடுதலைக் கொடியை பறக்க விட்டனர்.

யாழ்ப்பாணம் காரை நகரில் ஒரே ஒரு கடற்படை முகாம் உள்ளது. இந்த முகாம் மீது ஈழ கொரில்லாக்கள் நேற்று முன் தினம் குண்டுகளை வீசி திடீர் தாக்குதல் நடத்தினார்கள்.

4 மணி நேரம் நடந்த இந்த தாக்குதல் முடிவில், முகாமில் இருந்த 150 சிங்கள கடற்படை வீரர்கள் உயிரிழந்தனர்.

கடற்படையினர் இது நாள் வரைக்கும் பயன்படுத்தி வந்த சக்தி வாய்ந்த பீரங்கி படகுகளும், இந்த தாக்குதலில் சேதமடைந்தன. முகாம் தரைமட்டமாகியது.

பின்னர் இந்த முகாமில் கொரில்லாக்கள் மஞ்சள் நிறத்தில் நட்சத்திரம் பொறித்த சிகப்பு நிறத்திலான ஈழ விடுதலைக் கொடியையும் பறக்க விட்டனர்.

### வெளியேற நடுநடுங்கிய ராணுவம்

காரை நகரில் இந்தத் தாக்குதல் நடந்து கொண்டிருந்த அதே நேரம், பலாலி, குருநகர் முகாம்களிலும், இதே போல 'திடீர்' தாக்குதல் நடந்து ராக்கெட் குண்டுகள் வீசப்பட்டன.

உளளேயிருந்து எதிர் தாக்குதலில் ஈடுபட்டார்களே தவிர. வீரர்கள் யாரும் வெளியே வரவேயில்லை.

இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி, கொன்று மீன்களையும், மீன்பிடி வலைகளையும் பறித்துச் சென்றவர்கள் காரை நகர் கடற்படை வீரர்களே.

இந்த கொரில்லா தாக்குதலை சமாளிக்க அதிபர் ஜெயவர்த்தனே போர்க்கால நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். விசேஷ ராணுவக் குழுவை அமைத்துள்ளார் என்று ஈழ மக்கள் தகவல் நிலையம் கூறியுள்ளது.

மட்டக் களப்பு சிறையை தகர்த்ததும். சி.ஐ.ஏ. உளவாளிகள் அலன் தம்பதிகளைக் கடத்தியும் இலங்கை அரசை ஆட்டம் காண வைத்தவர்களான ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் ராணுவப் பிரிவே இந்த சாகசத்தையும் செய்திருப்பதாக தகவல் நிலையம் மேலும் கூறியுள்ளது.

# 150 Lankan navymen killed in Tamil counter-attack

Madras, Feb. 12: The Tamil Nationalists have answered the Lankan Army's latest terror-strike by smashing the Karainagar Naval camp on Sunday, according to delayed reports reaching here.

*The Eelam People's Information Centre (EPIC) in a press note today claimed that in the retaliatory strike by the Tamils more than 150 Lankan Navy cadets had been killed and the naval base itself was liquidated.*

The Tamils, for the first time, used rocket-launchers and shoulder-fired rockets for the counter-attack, it is stated.

This was no serious an attack that none of the army men, in the nearby *Guru Nagar camp* dared to come out and go to the rescue of the navy cadets. When an attempt was made to move the army men out, the Tamils launched a fierce rocket attack on the camp and this effectively pinned them down, it is stated.

The Karainagar naval base is now under the control of the Tamil nationalists the press note said. The red flag with five stars was hoisted on the destroyed base, it added.

This base was used by the Lankan Navy patrol to mount regular attacks on Indian fishermen. The major risk to Indian fishing has been removed, the EPIC press release claimed.

This first major and organised assault on Lankan troops is believed to have been organised by the Eelam People's Revolutionary Liberation Front which is different from the Tiger organisation led by Prabhakaran.

NEWS TODAY 12-2-1985.

இலங்கை கடற்படை முகாம் மீது

"விடுதலைப் புலி"கள் குண்டு வீச்சு

## 150 சிப்பாய்கள் சாவு!

4 மணி நேரம் பயங்கர துப்பாக்கி சண்டை

